அனுப்புநர்
திருமதி. ர. ராணி, பி.இ.,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.
6, சன்னதி தெரு, சுப்ரமணியநகர்,
சூரமங்கலம், சேலம் – 636 005.
தொலைபேசி எண்: 0427-2448625
Email ID: ddslmregion@gmail.com

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர்,
கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம்,
கெங்கவல்லி வட்டம்,
சேலம் மாவட்டம்.

ந.க.எண்.1138/2020/சேம3 நாள்.26.03.2021

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு – சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – சேலம் மாவட்டம் – கெங்கவல்லி வட்டம்/ஊராட்சி ஒன்றியம் – நடுவலூர் கிராமம் – ச.எண் 35/1பி மற்றும் 35/2சி2–ல் 1.50 ஏக்கர் புஞ்சை பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் – ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. வட்டார வளர்ச்சி அலுவலர், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண் 615/2019/தி4 நாள் 20.03.2020 மற்றும் 05.02.2021.
2. மனுதாரர் விண்ணப்பம் நாள் 19.03.2021.
3. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 03.07.2020 மற்றும் 17.03.2021.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 14619/88/பிசிசி, நாள். 27.04.2014.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 40483/00/எல்ஏ1, நாள். 07.11.2002.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள். 19.04.2012.
7. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை யு.டி.(4.2), நாள்.04.06.2004.
8. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.122201/2017/Spl.cell.நாள்.28.09.2017.
10. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019.
11. வேளாண்மை இணை இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் எண் ஈ2/6386/2020 நாள் 22.07.2020.

------

பார்வை 1–ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான உத்தேசங்கள் பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3–ல் சுட்டிய 03.07.2020 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு, பார்வை 1–ல் சுட்டிய கடிதம் நாள் 05.02.2021 மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக



S. Venkatachalam

ஒப்படைக்கப்பட்டு தானபத்திரம் எண் 140/2021 நாள் 21.01.2021 மற்றும் மின்பகிர்மான இடம் தானபத்திரம் எண் 2714/2020 நாள் 04.11.2020 ஆகியவை பெறப்பட்டதைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1 மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா(சே) எண் 34/2021 என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

2 மேலும், பார்வை 4 மற்றும் 5 ஆகியவற்றில் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும், எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3 பார்வை 6–ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி பொது திறவிடங்கள் மற்றும் சாலைகள் தானபத்திரம் மூலம் பதிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைத்துள்ளதன்படி மனைப்பிரிவு உரிமம் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

4 மனைப்பிரிவு நிபந்தனை எண்.16–ன்படி பொது உபயோக இடம் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதன்படி வட்டார வளர்ச்சி அலுவலர், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்திடம் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும், மனைப்பிரிவு நிபந்தனை 16(இ), 16(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5 மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் அனைத்து (Quality of Roads) உள்ளாட்சியின் தரத்திற்கேற்ப தார்சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்திடம் சான்று பெற்ற பின்னரே உத்தேச மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6 மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண். 16(ஈ)–ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7 உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

"The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The promoter has to advertise market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority".

(65)

8. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

26/3/2024

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
சேலம் மாவட்டம்.

26/3/21 26.3.2024

இணைப்பு
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு
நிபந்தனைகள் (2 நகல்கள்)

நகல்
1. திரு. வெங்கடாசலம்,
9/411/1, தெற்குகாட்டு கொட்டாய்,
நடுவலூர் கிராமம்,
கெங்கவல்லி வட்டம்,
சேலம் மாவட்டம்.

2. Stock File (வரைபடம் –1 மற்றும் நிபந்தனைகள் படிவம் –1)

3. Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA),
No.1A, 1st Floor, Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai 600 008.

S. Venkatachalam

கெங்கவல்லி வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்,
முன்னிலை : ட்டி.அன்புராஜன்.,

ந.க.எண்.615/2019/அ4 நாள். 19.04.2021

பொருள்: மனைப்பிரிவு – கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம் – நடுவலூர் ஊராட்சி – சர்வே எண்.35/1பி மற்றும் 35/2சி2ல், 1.50 ஏக்கர் அல்லது 6070.23 ச.மீ. பரப்பளவு – உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வரைபட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது – மனைப்பிரிவினை வரைமுறைப்படுத்தி உத்தரவிடுதல்.

பார்வை:
1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14619/88/பிசி, நாள்.27.04.2014.
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/00/எல்ஏ1, நாள்.07.11.2002.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012.
4. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை யுடி (4.2), நாள்.04.05.2004.
5. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.05.2017.
6. நகர்புற ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிகை ந.க.எண்.12220I/2017Spl.cell நாள்.28.09.2017.
7. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019
8. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் உத்தரவு ந.க.எண்.1138/2020/சேம–3 நாள்.26.03.2021.
9. சார்பதிவாளர், கெங்கவல்லி அவர்களின் பத்திரம் பதிவு எண். 443/2020 நாள்.
10. திரு.எஸ்.வெங்கடாசலம்நடுவலூர் என்பவர் சமர்ப்பித்த கருவூலக செலுத்துச் சீட்டு நாள்.19.04.2021

******

**உத்தரவு**

கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, நடுவலூர் ஊராட்சியில் சர்வே எண்.35/1பி மற்றும் 35/2சி2ல், 1.50 ஏக்கர் அல்லது 6070.23 ச.மீ. பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் பேரில் ம.வ.சே.ம(உ.தி)எண்.1138/2020/சேம–3) என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொதுநிபந்தனைகளுடன் திட்ட அனுமதியும் உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் பார்வை 8ல் காணும் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சாலை பரப்பு, உள்ளாட்சிக்கும் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும் (TANGEDCO) ஆகியவைக்கு 1850.35 சதுர மீட்டர் தானம் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த மனைப்பிரிவுக்கு 3% மதிப்பீட்டுத் தொகை ரூ.20904/- 19.04.2021 அன்று பார்வை 10ல் காணும் வாயிலாக தொகை செலுத்தப்பட்டுள்ளது.

நடுவலூர் ஊராட்சியில் சர்வே எண்.35/1பி மற்றும் 35/2சி2ல், 1.50 ஏக்கர் அல்லது 6070.23 ச.மீ. பரப்பளவை கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி பார்வை 8ல் காணும் செயலாணையின்படி ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதங்களில் உள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகள் 1 முதல் 29 வரை 29 மனைகளுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு : வரைபடம்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
கெங்கவல்லி.

பெறுதல்,

திரு.S.வெங்கடாசலம்,
தெற்கு காட்டுக்கொட்டாய்,
நடுவலூர் அஞ்சல், சேலம் மாவட்டம்.

19/4/2021

S. Venkatachalam

நகல் – உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்புத்துறை), சேலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் – உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), சேலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் – சார்பதிவாளர், கெங்கவல்லி அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.